# அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி

நாமக்கல் - 637 002

## ஆண்டு மலர்
## 2019 - 2020,
## 2020 - 2021



## இதனுள்...


| | | |
|---|---|---|
| 1. | ஆண்டறிக்கை | - 3 |
| 2. | உதவித்தொகை | - 3 |
| 3. | நாட்டு நலப்பணித் திட்டம் | - 4 |
| 4. | நூலகம் | - 4 |
| 5. | இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் | - 5 |
| 6. | செஞ்சுருள் சங்கம் | - 5 |
| 7. | நுண்கலை மன்றம் | - 7 |
| 8. | வேலைவாய்ப்பு மையம் | - 8 |
| 9. | போக்சோ குழு | - 8 |
| 10. | மகளிர் மன்றம் | - 9 |
| 11. | மாற்றுத் திறனாளிகள் மையம் | - 9 |
| 12. | சுற்றுச்சூழல் சங்கம் | - 10 |
| 13. | உள்தர உறுதி மையம் | - 10 |
| 14. | முன்னாள் மாணவர் சங்கம் | - 11 |
| 15. | உடற்கல்வித் துறை | - 12 |
| 16. | தமிழ்த் துறை | - 13 |
| 17. | ஆங்கிலத் துறை | - 14 |
| 18. | பொருளியல் துறை | - 15 |
| 19. | வணிகவியல் துறை | - 15 |
| 20. | வணிக நிர்வாகவியல் துறை | - 16 |
| 21. | புள்ளியியல் துறை | - 17 |
| 22. | தாவரவியல் துறை | - 17 |
| 23. | வேதியியல் துறை | - 17 |
| 24. | இயற்பியல் துறை | - 18 |
| 25. | விலங்கியல் துறை | - 19 |
| 26. | கணினி அறிவியல் துறை | - 19 |
| 27. | கணிதத் துறை | - 20 |
| 28. | புவியியல் துறை | - 21 |
| 29. | மாணவர்களின் படைப்புகள் | - 21 |

# மலர் முகம்

பன்னிரண் டாண்டு பருவம் கண்டு
　　　　பொலிந்து மலர்வது குறிஞ்சி மலராம்;
இன்சுவைக் குழலது இசைக்கும் மாலையில்
　　　　எழிலாய் மலர்வது முல்லை மலராம்;
என்றும் விரிந்து எங்கும் மணக்கும்
　　　　இளமருதம் நெய்தல் பாலை பலவாம்;
நன்றாம் ஈராண்டு நலமுடன் சேர
　　　　நறுமணம் வீசுமெங்கள் ஆண்டு மலரிதே.



# அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி

நாமக்கல் - 637 002

கல்லூரி ஆண்டு மலர் 2019 - 2020, 2020 - 2021



**மலர்க்குழுத் தலைவர்**

முனைவர் **பெ.முருகன்,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

**கல்லூரி முதல்வர்**







**மலர்க்குழு ஒருங்கிணைப்பாளர்கள்**

முனைவர் **சு.பங்காரு,** எம்.எஸ்ஸி., எம்.பில்., பிஎச்.டி.,

**இயற்பியல் துறைத்தலைவர்**

முனைவர் **மு.நடராஜன்,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

**தமிழ்த் துறைத்தலைவர்**

**மலர்க்குழு உறுப்பினர்**

முனைவர் **அ.சின்னதுரை,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**

# அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
# நாமக்கல் - 637 002.

## ஆண்டறிக்கை - 2019 - 2020, 2020 - 2021

பேரறிஞர் அண்ணாவின் பெயர் கொண்ட இவ்வரசு கலைக்கல்லூரி 1968-69-ஆம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. தற்பொழுது தேசியத் தர மதிப்பீட்டு மறு ஆய்வில் B தரத்துடன் எட்டு இளம் அறிவியல் வகுப்புகளும் மூன்று இளங்கலைப் பட்ட வகுப்புகளும் இளம் வணிகவியல் பட்ட வகுப்பும் இளம் வணிக நிர்வாகப் பட்ட வகுப்பு ஒன்றும் நடைபெற்று வருகின்றன. ஐந்து முது அறிவியல் வகுப்புகளுடன் நான்கு முதுகலை வகுப்புகளும் உள்ளன. ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) வகுப்புகள் ஆங்கிலம், பொருளியல், வணிகவியல் ஆகிய கலைப் பாடப்பிரிவுகளிலும் இயற்பியல், வேதியியல், தாவரவியல், கணிதம் ஆகிய அறிவியல் பாடப்பிரிவுகளிலும் உள்ளன. ஆங்கிலம், பொருளியல், இயற்பியல், வேதியியல், தாவரவியல், கணிதம் ஆகிய பாடப்பிரிவுகளில் முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2019- 2020 - ஆம் கல்வியாண்டில் இளநிலையில் 1703 மாணவர்களும் முதுநிலையில் 326 மாணவர்களும், 2020 - 2021 - ஆம் கல்வியாண்டில் இளநிலையில் 1766 மாணவர்களும் முதுநிலையில் 350 மாணவர்களும் ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) பாடப்பிரிவில் 42 மாணவர்களும் முனைவர் பட்ட ஆய்வை 29 மாணவர்களும் மேற்கொண்டு வருகின்றனர். மொத்தம் இக்கல்லூரியில் 2019-2020 - ஆம் கல்வியாண்டில் 2020 மாணவர்களும் 2020-2021-ஆம் ஆண்டு கல்வியாண்டில் 2116 மாணவர்களும் பயின்று வருகின்றனர். மொத்த நிரந்தரப் பணியில் உள்ள ஆசிரியர்கள் 63 பேரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக மிகைப் பேராசிரியர்கள் 17 பேரும், கௌரவ விரிவுரையாளர்கள் 29 பேரும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் 24 பேரும் பணியாற்றி வருகின்றனர்.

பல்கலைக்கழக மானியக்குழுவின் நிதியில் நமது கல்லூரியின் அனைத்து விதமான நடவடிக்கைகளும் கணினிமயமாக்கப்பட்டு அனைத்துத் தகவல் பரிமாற்றங்களும் துரிதமாகப் பரிமாறப்படுகின்றன.

### உதவித்தொகை :

நமது கல்லூரியில் 2019-2020 - ஆம் கல்வியாண்டில் முதுநிலை இயற்பியல் இரண்டாமாண்டு மாணவர்கள் R. லோகேஸ்வரன், ரூ.1250, S. பூபதி, ரூ.3750, B. சந்தியா ரூ.1250, M. சங்கவி ரூ.1250 ஆகியோர் ஆய்வுத்திட்டத்திற்கு இத்தொகையைப் பெற்றுள்ளனர். மேலும் முதுஅறிவியல் விலங்கியல் இரண்டாமாண்டு மாணவர் M.பன்னீர்செல்வம் ரூ.1500 பெற்றுள்ளார்.

2020-2021 ஆம் கல்வியாண்டில் முதுஅறிவியல் தாவரவியல் மாணவி.கே.சசிகலா ரூ.15000 தொகையினைப் பெற்றுள்ளார்.

2019-2020-ஆம் கல்வியாண்டில் SC/ST 683 மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை ரூ.38,89,630 வழங்கப்பட்டது. BC/MBC 495 மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை ரூ.9,30,976 வழங்கப்பட்டது. தமிழ் வழி ஊக்கத்தொகையாக 497 மாணவர்களுக்கு ரூ.4,47,300 வழங்கப்பட்டது.

மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை

2020-2021 - ஆம் கல்வியாண்டில் SC/ST 632 மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை ரூ.30,88,378 வழங்கப்பட்டது. BC/MBC 597 மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை ரூ.11,21,083 வழங்கப்பட்டது. தமிழ் வழி ஊக்கத்தொகையாக 573 மாணவர்களுக்கு ரூ.5,17,500 வழங்கப்பட்டது.

## நாட்டு நலப்பணித் திட்டம்

நமது கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டத்தின்கீழ் நான்கு அலகுகள் செயல்படுகின்றன, இவ்வமைப்பின் சார்பில் கொரோனா குறித்த விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது. சமுதாயத்தில் இளைஞர்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரி மாணவ மாணவிகள், பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாப் பணியாளர்களுக்கும் சேர்த்து மொத்தம் 695 நபர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. திரு.சி.சின்னுசாமி, முனைவர் சு.பாலமுருகன், முனைவர் பி.சிவக்குமார், முனைவர் வெ.ராஜேஸ்வரி ஆகியோர் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்களாகச் செயல்படுகின்றனர்.

நாட்டு நலப்பணித் திட்டம் சார்பாக சமுதாயத்தில் இளைஞர்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் இணையவழியக் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார், இக்கருத்தரங்கில் தமிழக அளவில் நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ - மாணவிகள் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். அவ்வாறு கலந்து கொண்டவர்களுக்கு இணைய வழிச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

மேலும் தீண்டாமை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் பட்டியல் இன - நபர்களின் வீடுகளுக்குச் சென்று மாணவ மாணவிகள் தேநீர் அருந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இத்திட்டத்தின் சார்பாகத் தேசிய ஒருமைப்பாட்டுத் தின உறுதிமொழி நமது கல்லூரி வளாகத்தில் எடுக்கப்பட்டது. இதில் பேராசிரியர்களும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர். ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

இக்கல்வி ஆண்டில் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பாக அரசிடமிருந்து பெறப்பட்ட கொரோனா நிதியிலிருந்து கை கழுவும் திரவம், முகக் கவசம், சோப்பு, தண்ணீர் நிரப்புவதற்கு வாளி, குவளை, பிளாஸ்டிக் குடம் இவை வாங்கப்பட்டு முதல்வர் அவர்களின் அனுதியுடன் கல்லூரியில் உள்ள அனைத்துத் துறைகளுக்கும் விநியோகிக்கப்பட்டன.

வருகிற சட்ட மன்றத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் பணியில் ஈடுபடுவதற்காக 92 நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் தேர்ந்தெடுக்கபட்டு நாமக்கல் காவல் துறை மூலம் சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டது. அதில் கலந்து கொண்ட மாணவர்கள் தேர்தல் பணியில் ஈடுபட்டனர்.

இம்மாணவர்களுக்கு நாமக்கல் காவல்துறை மூலம் பாராட்டுச் சான்றிதழ் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

## நூலகம்

இக்கல்லூரியில் பொது நூலகம், மின்னூடக நூலகம் எனத் தனித்தனியே இரண்டு நூலகங்கள் உள்ளன. அறுபதுக்கும் மேற்பட்ட பருவ இதழ்கள், தினசரி செய்தித்தாள்கள் இவற்றுடன் 43,789 நூல்களைக் கொண்டு இயங்குகிறது. டிசம்பர் 17,2020 அன்று 'மின்வளங்கள்' என்ற தலைப்பில் பயிலரங்கம் நடைபெற்றது. மேலும் மார்ச் - 1,2021-ல் 'ஆய்வியலும் நூலகமும்' என்ற தலைப்பில் பயிலரங்கம் நடத்தப்பட்டது.

## இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

இரத்த தான விழிப்புணர்வு, கண் தான விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, மரம் நடும் நிகழ்ச்சி, கொரோனா விழிப்புணர்வு, மாணவர்களுக்குத் தன்னார்வத் தொண்டினை ஊக்கப்படுத்துதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பேரிடர், இயற்கைச் சீற்றம் மற்றும் நோய்த்தொற்றுக் காலங்களில் உதவுவதற்காகப் பேரிடர் மேலாண்மைக் குழு ஏற்படுத்தப்பட்டது. கல்லூரி மாணவர்களுக்குக் கட்டுரை மற்றும் ஓவியப்போட்டிகள் நடத்தப்பட்டன.

## செஞ்சுருள் சங்கம்

இச்சங்கம் சார்பாக, 'ஆரோக்கியமான வாழ்க்கையே மகழ்ச்சியான வாழ்க்கை' என்ற பயிலரங்கம் நடைபெற்றது. எய்ட்ஸ் விழிப்புணர்வு, போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மார்பகப் புற்றுநோய் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 20.02.2020 அன்று 'மனித உரிமைகள்' என்ற தலைப்பில் பகடிவதைத் தடுப்புச்சட்டம், வரதட்சணைத் தடுப்புச்சட்டம், பாலியல் குற்றங்களைத் தடுத்தல், பெண்களின் உரிமை மற்றும் கடமைகள் குறித்தும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

செஞ்சுருள் சங்கம் சார்பில் 15.06.2020 அன்று 'மனித ஆரோக்கியத்திற்கான மூலிகை மருத்துவம்' என்ற தலைப்பில் இணையவழிக் கருத்தரங்கம் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் பெ.முருகன் தலைமை தாங்கிக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். கோயம்புத்தூர் வனச்சூழலியல் மற்றும் பருவகால நிலை மாற்றத் துறை, வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் விஞ்ஞானி முனைவர் க.பன்னீர்செல்வம், மனித ஆரோக்கியத்திற்கான மூலிகைத் தாவரங்கள் மற்றும் அதைப் பல்வேறு நோய்களுக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பதோடு மருத்துவத் தாவரங்களின் குணாதிசயங்கள் குறித்தும் பேசினார்.

செஞ்சுருள் சங்கம் சார்பில் 22.06.2020 அன்று 'பூச்சிகள்வழி பரவும் நோய்களும் மேலாண்மையும்' என்ற தலைப்பில் வலையரங்கம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் பெ.முருகன் தலைமை தாங்கிக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். மைசூரிலுள்ள மத்திய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் பாதுகாப்பு உணவு ஆராய்ச்சி ஆய்வகத்தின் விஞ்ஞானி முனைவர் ந.கோபாலன் 'பூச்சிகள்வழி பரவும் நோய்களும் மேலாண்மையும்' என்ற தலைப்பில் பேசுகையில் சிற்றுயிரிக் கடத்திகளால் மனிதர்களுக்கு ஏற்படும் தொற்றுநோய்கள் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றிப் பேசினார். மேலும் பூச்சிகளின் வகைப்பாடு, பூச்சிகள்வழி பரவும் நோய்களின் வீரியம், தொற்றுநோய்களின் தாக்கம், பருவநிலை மாற்றமும் தொற்றுநோயும் மற்றும் தொற்றுநோய்த் தடுப்புவழி முறைகள் குறித்தும் பேசினார்.

செஞ்சுருள் சங்கம் சார்பில் 23.06.2020 அன்று 'மாற்று மருத்துவமும் ஹோமியோபதியும்' என்ற தலைப்பில் வலையரங்கம் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் பெ.முருகன் 'மாற்றுமருத்துவமும் ஹோமியோபதியும்' என்ற தலைப்பில் பேசுகையில் ஆயுர்வேதம், யுனானி, சித்தா, ஹோமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய ஐந்து மருத்துவத் துறைகளும் ஆயுஷ் என்று இந்திய அரசால் அடையாளப்படுத்தப்படுகிறது என்று பேசினார். மேலும் இவற்றை ஆங்கில மருத்துவத்திற்கான மாற்று மருத்துவம், பாரம்பரிய மருத்துவம் என்று கூறுகின்றனர் என்று ஹோமியோபதி மருத்துவத்தை அறிமுகப்படுத்தியும் அதன் கோட்பாடுகளைக் குறித்தும் பேசினார். மேலும் ஆர்சனிகம் ஆல்பம் - 30சி என்னும் மருந்தைக் கொரோனாவுக்கான எதிர்ப்புச் சக்தியைப் பெறப் பயன்படுத்தலாம் என அரசு பரிந்துரை செய்திருப்பதையும் குறிப்பிட்டுப் பேசினார்.

செஞ்சுருள் சங்கம் சார்பில், 06.07.2020 அன்று 'புத்தக வாசிப்பும் ஆளுமைத்திறனும்' என்ற தலைப்பில், வலையரங்கம் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் பெ.முருகன் தலைமையேற்று உரையாற்றினார். அவர்தம் உரையில் அறிவுக்குக் கருவியாகப் புத்தகம் அமையும் என்றும் புத்தக வாசிப்பால் ஒருவர் தம் ஆளுமையை எப்படி எல்லாம் மேம்படுத்திக்கொள்ள முடியும் என்றும் கூறினார். விளையாட்டு உள்ளிட்ட புறத்திறன்களை வளர்த்துக்கொள்ள இயலாதவர்கள்கூடப் புத்தக வாசிப்பில் எளிதில் ஈடுபட முடியும் எனவும் அதன் மூலம் தமக்கு ஓர் அடையாளத்தை உருவாக்கிக் கொள்ள முடியும் எனவும் கூறினார்.

செஞ்சுருள் சங்கம் சார்பில் 23.08.2020 அன்று 'மனித ஆரோக்கியத்தில் ஊட்டச்சத்தின் பங்கு' என்ற தலைப்பில் இணையவழிக் கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் பெ.முருகன் தலைமை தாங்கி இணையவழிக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழக ராணி மெய்யம்மை செவிலியர் கல்லூரி விரிவுரையாளர் அ.அன்புமலர் ஊட்டச்சத்து நிறைந்த ஆரோக்கியமான உணவுகள் பற்றிக் கூறிக் கொரோனா சூழலில் சமச்சீரான ஊட்டச்சத்து உணவை எடுத்துக் கொள்வதனால் நமது நோய் எதிர்ப்புச் சக்தி பெருகும் என்றார். மேலும் ஊட்டச்சத்துக் குறைவினால் குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர் மற்றும் முதியவர்கள் நோய்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள புரதம் மற்றும் நார்ச்சத்துள்ள உணவுகளான முளைகட்டிய பயறுகள், சிறுதானியங்கள், காய்கறிகள், கீரை வகைகள், பழங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு நம் கல்லூரியின் செஞ்சுருள் சங்கம் சார்பில் 01.12.2020 அன்று இணையவழி எச்ஐவி/எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் பெ.முருகன் தலைமை தாங்கி இணையவழி விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். சேலம், கோனேரிபட்டி, அரசு மேம்படுத்தப்பட்ட முதன்மைச் சுகாதார மையத்தின் மருத்துவ அலுவலர், டாக்டர் எம்.ஆர்.சூரியபிரகாஷ் உலக எய்ட்ஸ் தின மையக் கருத்தான உலகளாவிய ஒற்றுமை, பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளுதல் என்ற தலைப்பில் நடைபெற்ற இணையவழி விழிப்புணர்வு நிகழ்ச்சியில் எச்ஐவி/எய்ட்ஸ் விழிப்புணர்வு மற்றும் எச்ஐவி தொற்று உள்ளோர்க்குக் கொரோனாவினால் ஏற்படும் விளைவுகள் பற்றிப் பேசினார். மேலும் உலகளாவிய ஒற்றுமை மற்றும் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளுவதனால் எச்ஐவி மற்றும் கொரோனா தொற்றிலிருந்து விடுபடலாம் எனவும் எச்ஐவியால் பதிக்கப்பட்ட நபர்களுக்கு நமது அரவணைப்பும் ஆதரவும் மிகவும் அவசியம் எனவும் பேசினார்.

செஞ்சுருள் சங்கம் சார்பில் 29.01.2021 அன்று 'புத்தக வாசிப்பும் சமூகச் சிந்தனையும்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் கல்லூரிக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் பெ.முருகன் தலைமையேற்று உரையாற்றினார். அவர் தம் உரையில் அச்சுப் புத்தக வாசிப்பு வளர்ந்து இன்று மின்னூல், கிண்டில், ஒலி நூல் என வெவ்வெறு வடிவங்களில் பெருகியிருக்கிறது. நவீனத் தொழில்நுட்பத்தால் வாசிப்பு கூடியுள்ளதே தவிர குறையவில்லை. வாசிப்பு கூடியிருக்கும் காரணத்தால்தான் சமூகம் பற்றிய சிந்தனைகளும் விழிப்புணர்ச்சியும் மிகுந்திருக்கிறது.

முந்தைய காலத்தைவிட இப்போது அரசியல் அறிவைப் பெரும்பாலானோர் பெற்றிருக்கவும் வாசிப்பே காரணம். மாற்றுப் பார்வை, மாற்றுச் சிந்தனை, மாற்று வழிகள் எனச் சமூகம் முன்னகர வாசிப்பே காரணமாக உள்ளது. ஆகவே அனைவரும் புத்தக வாசிப்பில் பெரிதும் கவனம் செலுத்த வேண்டும் என்று பேசினார்.

## நுண்கலை மன்றம்

இம்மன்றம் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணாக்கர்களை ஊக்கப்படுத்திப் பிற கல்லூரிகளில் நடைபெறும் கவிதை, கட்டுரை, ஓவியம், வினாடி வினா, நடனம் போன்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்கச் செய்து பரிசுகளைப் பெற்றுத் தருகிறது.

இக்கல்வியாண்டில் நுண்கலைமன்ற ஒருங்கிணைப்பாளராகத் தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் பி.கந்தசாமி செயல்பட்டுவருகிறார்.

மதுரை முத்தமிழ் நட்டுப்புறக் கலைகள் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் உலகத் தமிழ்க் காப்பிய ஆராய்ச்சி நிறுவனம் மலேசியா இணைந்து, சர்வதேச முத்தமிழ் விருதினை எ.மோகன்குமார் இரண்டாமாண்டுத் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்க்கு 27.12.2020 அன்று வழங்கியது. கல்லூரி முதல்வர் மற்றும் நுண்கலை மன்ற ஒருங்கிணைப்பாளர் மற்றும் பேராசிரியர்கள் பாராட்டி வாழ்த்தினர். மேலும் இவரை யாதும் ஊரே யாவரும் கேளீர் சங்கமம் தமிழியக்கம் இணைந்து நடத்திய சங்கமம் விருதுகள் விழாவில் 2020 ஆண்டுக்கான சமூக சேவகர் மற்றும் சாதனை மாணவர் எனப் பாராட்டிச் சான்றிதழ் வழங்கியுள்ளது.

இக்கல்லூரியில் செயல்படும் நுண்கலை மன்றத்தின் வாயிலாக 19.02.2020 அன்று படைப்பாற்றல் பயிலரங்கம் நடத்தப்பட்டது. இப்பயிலரங்கில் கட்டுரை எழுதுதல் நிகழ்வு குறித்துக் கல்லூரி முதல்வர் பெ.முருகன் உரை நிகழ்த்தினார். மேடைப்பேச்சு குறித்து முனைவர் அரசு பரமேசுவரன் டிரினிட்டி மகளிர் கல்லூரி, மேடையில் எப்படிப் பேசுவது என உரை நிகழ்த்தினார். ஓவியம் வரைவது எப்படி என்பது குறித்து ஓவிய ஆசிரியர் திரு.ஆ.மகேந்திரன் ஓவியம் வரைந்து காட்டி உரை நிகழ்த்தினார். ஓய்வு பெற்ற வட்டாட்சியர் திரு.டி.கனகராஜ் நடன அசைவுகளைப் பற்றி விளக்கினார். விழா முடிவில் திரு.கோ.இரவி நாமக்கல் மாவட்ட நூலகர் அவர்களும் முனைவர்.டி.எம்.மோகன் தலைவர் நாமக்கல் கவிஞர் சிந்தனைப் பேரவை அவர்களும் கல்லூரி முதல்வர் அவர்களும் இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிப் பாராட்டிப் பரிசு வழங்கினர்

இக்கல்லூரி நுண்கலை மன்றமும் கரூர் தேடல் பண்பலையும் இணைந்து 18.09.2019 அன்று கலைவிழா நடத்தியது.இக்கலை விழாவில் மாணவர்களின் பன்முகத்திறமை வெளிப்பட்டது.

கவிதை, ஓவியம், பாட்டு, தனிநபர் நடனம், குழு நடனம், பலகுரல், தற்காப்புக் கலைகளான கராத்தே, சிலம்பு மற்றும் நாடகம் ஆகியன நடத்தப்பட்டன. புவியியல் துறைத்தலைவர் பேராசிரியர் பெ.சுந்தரசோழன் தேடல் பண்பலை இயக்குநர் டி.இராஜேந்திரன், எஸ்.ஆர்.எம். கேக் நிறுவனர் சுந்தர் மற்றும் நாமக்கல் சங்கமித்ரா ஐ.ஏ.எஸ்.அகாடமி இயக்குநர் திரு.பன்னீர்செல்வம், நாமக்கல் பாடி கன்வர்ஸ் பேமிலி கன்வர்ஸ் பேமிலி சலூன் இயக்குநர் திருமதி.தனலட்சுமி ஆகியோர் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கிச் சிறப்பித்தனர்.

இக்கல்லூரி நுண்கலை மன்றமும் தமிழ்த்துறை மற்றும் இயற்பியல் துறையும் இணைந்து 24.09.2019 அன்று சிறப்புப் பட்டிமன்றம் நடத்தின. இவ்விழாவிற்கு முதல்வர் (பொ) பெ.சுந்தரசோழன் தலைமை தாங்க தமிழ்த் துறைத்தலைவர் முனைவர்.மு.நடராஜன் வரவேற்புரை ஆற்ற முனைவர் சு.பங்காரு இயற்பியல் துறைத்தலைவர் முன்னிலை வகிக்க சமூக ஊடகங்கள் மாணவர்களைச் சீர்படுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா? எனும் தலைப்பில் நடந்தது. முனைவர் கா.சந்திரசேகரன் உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை, மு.ஜெயக்குமார் முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு ம.மோகன்குமார் இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு ஆகியோர் சீரழிக்கின்றன எனும் தலைப்பில் பேச, முனைவர் சு.பங்காரு இயற்பியல் துறைத்தலைவர், ம.சங்கவி முதுஅறிவியல் இயற்பியல் இரண்டாமாண்டு, சு.திவ்யா முதுஅறிவியல் இயற்பியல் இரண்டாமாண்டு, கு.விக்னேஷ்குமார் இளங்கலை இயற்பியல் மூன்றாமாண்டு, அ.தமிழ்எழில் இளங்கலை ஆங்கிலம் முதலாமாண்டு ஆகியோர் சீர்படுத்துகின்றன என்ற தலைப்பில் பேசினார்கள்.

## வேலைவாய்ப்பு மையம்

இம்மையம் சார்பாக 31 அக்டோபர் 2020 அன்று தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புகள் மற்றும் இராணுவத்தில் உள்ள வேலைவாய்ப்புகள் எனும் தலைப்பில் நாமக்கல் முன்னாள் படை வீரர் அலுவலகத்தின் உதவி இயக்குநர் திரு.இராம கிருஷ்ணன் சிறப்புரை வழங்கினார். 07.01.2021 அன்று 'அணுகுமுறை நிர்வகித்தல்' என்ற தலைப்பில் திண்டுக்கல் ஜேக்கல் மெமோரியல் கிறித்துவக் கல்லூரி இணைப்பேராசிரியர் முனைவர் ஜெ.குப்புச்சாமி சிறப்புரை ஆற்றினார். 03.02.2021 அன்று நாமக்கல் வேலைவாய்ப்புக் கருத்தரங்கில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திரு.கா.மெகராஜ் அவர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி.ரா.இராதிகா அவர்களும் வேலைவாய்ப்புகளைப் பற்றி எடுத்துரைத்தனர்.

## போக்சோ குழு

23.01.2020 அன்று கல்லூரியில் காவலன் சோஸ் செயலி மற்றும் போக்சோ சட்டம் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. புவியியல் துறை இணைப்பேராசிரியர் பெ.சுந்தரசோழன் கைபேசியின் பயன்பாடுகள் மற்றும் அதன் ஆபத்துகள் பற்றி எடுத்துரைத்தார். கல்லூரியின் முதல்வர் பெ.முருகன் பெண்களின் முன்னேற்றம் பெண் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சிறப்புரை ஆற்றினார். புள்ளியியல் துறைத்தலைவர் திருமதி.சா.சுஜாதா பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பற்றியும் பாதுகாப்பான வழிமுறைகளைப் பற்றியும் விளக்கிக் கூறினார்.

காவலன் சோஸ் செயலி பதிவிறக்கம் செய்வது எப்படி என்றும் ஆபத்தான நேரங்களில் செயலியைப் பயன்படுத்தும் முறையையும் மாணவிகளுக்கு விளக்கிக் கூறினார். இதில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு காவலன் சோஸ் செயலியைக் கைபேசியில் பதிவிறக்கம் செய்து கொண்டனர்.

## மகளிர் மன்றம்

06.02.2020 அன்று மகளிர் மன்றம் சார்பாக மாணவிகளுக்கு உடல் நலம் மற்றும் சுகாதாரம் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் முனைவர் பெ.முருகன் தலைமை தாங்கி, சுகாதாரம் பற்றி மாணவிகளுக்கு விளக்கிக் கூறினார். மகளிர் மன்ற ஒருங்கிணைப்பாளர் சா.சுஜாதா சுகாதாரம், கழிவறைப் பயன்பாடுகள் மற்றும் கழிவறைத் தூய்மையின் அவசியம் பற்றி மாணவிகளுக்கு எடுத்துக் கூறினார்.

02.03.2020 முதல் 05.03.2020 வரை மாணவிகளுக்கான கோலப்போட்டி, மருதாணிப் போட்டி, நக அலங்காரம், கண் அலங்காரம் மற்றும் மணப்பெண் அலங்காரம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

10.03.2020 அன்று நமது கல்லூரியில் நாமக்கல் மாவட்ட சமூக நலத்துறையும் நமது கல்லூரியின் மகளிர் மன்றமும் இணைந்து மகளிர் தின விழா கொண்டாடினர்.

கல்லூரி முதல்வர் மகளிர் தின விழாவிற்குத் தலைமை தாங்கினார். பெண் கல்வியின் அவசியம் குறித்துப் பேசினார். நாமக்கல் மாவட்ட சமூக நலத்துறை இயக்குநர், மற்றும் பெண்கள் நலத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டு பெண்களுக்கான நலத் திட்டங்கள் மற்றும் பெண்கள் நல உதவி எண் 181 -இன் சிறப்புப் பற்றியும் விளக்கிக் கூறினார்கள். மகளிர் மன்ற ஒருங்கிணைப்பாளர் திருமதி. சா.சுஜாதா பெண்கள் விழிப்புணர்வுடனும் பாதுகாப்பாகவும் இருப்பதன் அவசியம் பற்றிக் கூறினார். விழாவின் முடிவில் மாணவிகளுக்கான நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

## மாற்றுத் திறனாளிகள் மையம்

குழுவின் தலைவர் : கல்லூரி முதல்வர்

ஒருங்கிணைப்பாளர்கள் : முனைவர் கா.சந்திரசேகரன், தமிழ் உதவிப் பேராசிரியர்

திரு.சு.பாலமுருகன், பொருளியல் உதவிப் பேராசிரியர்.

குழு உறுப்பினர்கள் : த. அகிலன், இளங்கலை ஆங்கிலம் மூன்றாமாண்டு.

ப. தருண், இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

பெற்றோர் உறுப்பினர்கள் : திரு.மு.பழனிசாமி, திருமதி மா. தமிழ்ச்செல்வி.

நம் கல்லூரியின் மாற்றுத் திறனாளிகள் மையத்தில் பதினைந்து மாணவர்கள் உள்ளனர். ஒரு ஆசிரியர் அல்லாத உறுப்பினர் உள்ளார்.

நமது கல்லூரியில் இம்மையத்திற்கெனக் கல்லூரி முதல்வர் அவர்களால் தனி அறை ஒதுக்கப்பட்டு உள்ளது. அதற்கான அறைத் திறப்பு விழாவானது 11.02.2021 அன்று முதல்வர் தலைமையில் நமது கல்லூரியில் பணிபுரியும் மூத்த ஆசிரியர் அல்லாத பணியாளர் திரு.வெங்கடாசலம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அனைத்துத் துறைத்தலைவர்களும் பேராசிரியர்களும் ஆசிரியர் அல்லாப் பணியாளர்களும் மாற்றுத்திறனாளி மாணவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இம்மையம் வாயிலாகப் பார்வைக் குறைபாடு உள்ள ஆறு மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு நவீன கைபேசி தமிழக அரசிடமிருந்து பெற்று வழங்கப்பட்டது.

இம்மையத்தில் உள்ள மாணவர்களுக்கெனத் தனிக் கழிப்பறை வசதி முதல்வரால் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

இம்மையத்தில் உள்ள பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கென முதல்வரால் தனிக் கணினி, மின்னனு நூலகத்தில் வழங்கப்பட்டுள்ளது.

இம்மையத்தின் வாயிலாக மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ள வாய்ப்புகள் என்ற தலைப்பில் 12.03.2021 அன்று ஒரு நாள் கருத்தரங்கம் நமது கல்லூரியில் நடைபெற்றது. அந்நாளில் முதல்வர் அவர்களும் சிறப்பு விருந்தினர் ஆத்தூர் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரித் தமிழ் உதவிப் பேராசிரியர், முனைவர் எம்.முருகேசன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

இம்மையம் வாயிலாகப் பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாப் பணியாளர்களின் நன் கொடை மூலமாக ஐந்து மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குத் தற்பொழுது மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

**சுற்றுச்சூழல் சங்கம்**

18.02.2020 அன்று நமது கல்லூரிச் சுற்றுச்சூழல் சங்கம் மற்றும் விலங்கியல் துறை சார்பாக நடைபெற்ற கொரோனா வைரஸ் பற்றிய ஒருநாள் கருத்தரங்கில் கே.எஸ்.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி நுண்ணுயிரியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் ம.செல்வநாயகி வருகை தந்து சிறப்புரையாற்றினார்.

21.02.2020 அன்று நெகிழியினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதற்கான மாற்று முறை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**உள்தர உறுதி மையம் (ஐ.க்யூ.ஏ.சி)**

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியின் உள் தர உறுதி மையம் (ஐ.க்யூ.ஏ.சி) மற்றும் செஞ்சுருள் சங்கம் சார்பில் 10.12.2020 அன்று 'இணையதளக் குற்றங்களும் மனித உரிமைகளும்' என்ற தலைப்பில் இணையவழிக் கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் பெ.முருகன் தலைமை தாங்கி இணையவழிக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழக அரசியல் அறிவியல் மற்றும் பொது நிர்வாகத் துறைப் பேராசிரியர் மற்றும் துணைத் தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரியுமான முனைவர் பி.சக்திவேல் பேசுகையில் இன்றைய காலகட்டத்தில் இணையதளத்தின் பயன்பாடு மற்றும் அதன் வழியாக ஏற்படக்கூடிய சிக்கல்கள், குறிப்பாக எப்படி இணையதளக் குற்றங்கள் பெண்கள் மற்றும் குழந்தையின் மனித உரிமைகளைப் பாதிக்கின்றன என்பதை எடுத்துரைத்தார். மேலும் இணையக் குற்றங்களின் பல்வேறு வகைகள், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நடைமுறையில் உள்ள சட்டங்களான தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2008 மற்றும் பெண்களை இணையதளத்தில் தவறாகச் சித்தரிப்பதைத் தடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம் 2013 பற்றிப் பேசினார். மேலும் மொபைல் செயலிகள் குறிப்பாக, காவலன் செயலி வழியாக பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்கள் எவ்வாறு தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றி விரிவாகப் பேசினார். மேலும் இணையதளக் குற்றங்களில் இருந்து பாதுகாத்துக்கொள்ள ஆலோசனைகளை வழங்கினார்.

நமது கல்லூரியின் உள்தர உறுதி மையம் (ஐ.க்யூ.ஏ.சி) மற்றும் நூலகம் சார்பில் 17.12.2020 அன்று ஆராய்ச்சி மாணவர்களுக்கான மின் வளங்கள் என்ற தலைப்பில் பயிலரங்கம் கல்லூரியின்

கருத்தரங்க அறையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் தலைமை தாங்கிப் பயிலரங்கைத் தொடங்கி வைத்தார். நமது கல்லூரியின் நூலகர் திரு.பொ.ராஜ்குமார் ஆராய்ச்சி மாணவர்களுக்கான மின் வளங்கள் பற்றியும் மின் வளங்களை இணையதளம் வழியே தேடும் முறைகள் மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பதிவிறக்கும் செய்வது. மின் வளங்களைத் தங்கள் ஆய்வுக்குப் பயன்படுத்தும்போது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் விதி மீறல்கள் குறித்தும் எடுத்துரைத்தார். இதில் கல்லூரி ஆராய்ச்சி மாணவர்கள் பங்குபெற்றுப் பயனடைந்தனர்.

நம் கல்லூரியின் உள் தர உறுதி மையம் மற்றும் நாமக்கல் மாவட்ட நேரு யுவகேந்திரா ஆகியவை இணைந்து 12.03.2020 அன்று சுதந்திர இந்தியாவின் 75-ஆவது ஆண்டு விழா மற்றும் இளையோர் சுற்றுவட்டப் பாராளுமன்றம் 2021 தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் தலைமை தாங்கி, காந்திக்கும் தமிழ்நாட்டுக்கும் உள்ள உறவு பற்றிப் பேசினார். நம் கல்லூரியின் பொருளியல் துறை உதவிப் பேராசிரியர் அ.சக்திவேல் 'காந்தியப் பொருளாதாரம்' என்ற தலைப்பில் பேசினார். மாவட்ட நேரு யுவகேந்திராவின் ஆலோசனைக்குழு உறுப்பினர் மணிகண்டன் வாழ்த்துரை வழங்கினார். முடிவில் நேரு யுவகேந்திராவின் தன்னார்வத் தொண்டர் ஸ்ரீதர் நன்றி கூறினார். இதில் கல்லூரிப் பேராசிரியர்கள், பொருளியல் மற்றும் தமிழ்த்துறை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நம் கல்லூரியின் உள் தர உறுதி மையம் (ஐ.க்யூ.ஏ.சி) சார்பில் 10.04.2021 அன்று NAAC ஆவணங்கள் தயார் செய்தல் என்ற தலைப்பில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி கல்லூரியின் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் தலைமை தாங்கித் திறன் மேம்பாட்டுப் பயிற்சியைத் தொடங்கி வைத்தார். இதில் NAAC ஆவணங்கள் தயார் செய்தல் பற்றிப் பொருளியல் பேராசிரியர் ம.மாதவன் எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் துறைத்தலைவர்கள், அனைத்துத் துறை IQAC ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பல்வேறு விரிவாக்க அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கருத்தரங்குகளைக் கல்லூரிச் செஞ்சுருள் சங்கத் திட்ட அலுவலர் முனைவர் ம.சந்திரசேகரன் ஏற்பாடு செய்திருந்தார்.

## முன்னாள் மாணவர் சங்கம்

இக்கல்லூரியின் பொன்விழா ஆண்டையொட்டி முன்னாள் மாணவர் சங்கத்தார் மாணவிகளுக்கான ஓய்வுக்கூடம் கட்டித்தர முன்வந்தனர். அதற்கான அடிக்கல் நாட்டு விழா 23.08.2018இல் நடைபெற்றது. இப்பணி ஓரளவு நிறைவுற்று 13.09.2019 அன்று இக்கூடம் திறக்கப்பட்டது. இவ்விழாவில் திரு.எஸ்.கே.வேல் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் (பொறுப்பு) திரு.பெ.சுந்தரசோழன், பணி நிறைவு பெற்ற இக்கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் அ.லீலாகுளோரிபாய் இருவரும் முன்னிலை வகிக்க, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அர.அருளரசு புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தார். முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் திரு.அன்பழகன், கொங்குநாடு கல்வி நிறுவனங்களின் தலைவர் பெரியசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்த ஓய்வுக்கூடத்தின் பணி முழுமையாக நிறைவுற்ற நிலையில் இதன் திறவுகோலை ஒப்படைப்பதற்கான விழா 06.03.2020 அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் பெ.முருகன் அவர்களிடம் திறவுகோலை ஒப்படைத்தனர். அன்றுமுதல் இக்கூடம் மாணவியரின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

## உடற்கல்வித்துறை

கல்லூரியில் 52-ஆவது விளையாட்டுப் போட்டிகளான, கிரிக்கெட், கபாடி, கோ-கோ-, கூடைப்பந்து, சதுரங்கம், இறகுப்பந்து, கால்பந்து ஆகியவை நடத்தப்பட்டன. நம் கல்லூரி நாமக்கல் மாவட்டத் தடகளச் சங்கத்துடன் இணைந்து சட்டமன்றத் தேர்தலில் (2021) அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி, வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் உடற்பயிற்சி விழிப்புணர்வு மினி மாரத்தான் ஓட்டத்தை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திரு.கா.மெகராஜ் தொடங்கி வைத்தார். முதல் மூன்று இடங்களைப் பிடித்தவர்களுக்குப் பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டன.

## ஆண்டறிக்கை

### தென்னிந்தியப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் :

நமது கல்லூரி மூன்றாம் ஆண்டு வணிக நிர்வாகத்துறை மாணவர் மு.மோகன்ராஜ் கிரிக்கெட் போட்டியில் விளையாடி பெரியார் பல்கலைக்கழக அணியில் தேர்வு பெற்று 28.11.2019 முதல் 11.12.2019 வரை மைசூர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்டார். மேலும் இம்மாணவருக்குப் பல்கலைக்கழக விளையாட்டுத் தரச் சான்றிதழ் எண் மூன்று வழங்கப்பட்டது.

### பெரியார் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் :

1. ஆடவர் கிரிக்கெட் போட்டி திருச்செங்கோடு கே.எஸ்.ஆர் கல்லூரியில் 16.09.2019 முதல் 24.09.2019 வரை நடைபெற்றது. இப்போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் மூன்று சுற்றுகள் வென்று நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

2. ஆடவர் கோ-கோ போட்டி சேலம் வித்யா மந்திர் கல்லூரியில் அக்டோபர் 21,22-2019, ஆகிய நாட்களில் நடைபெற்றது.

3. ஆடவர் மகளிர் தடகளப் போட்டிகள் ஒசூர் எம்.ஜி.ஆர் கல்லூரியில் செப்டம்பர் 6,7,8-2019 ஆகிய நாட்களில் நடைபெற்றன. இப்போட்டியில் நமது கல்லூரி ஆடவர் மற்றும் மகளிர் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடினார்கள்.

4. மகளிர் கோ-கோ போட்டி குமாரபாளையம் SSM கல்லூரியில் ஆகஸ்ட் 26,27 ஆகிய நாட்களில் நடைபெற்றது. நமது கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடினார்கள்.

5. மகளிர் கபாடி ஊத்தங்கரை ஸ்ரீ வித்யா மந்திர் கல்லூரியில் 30.09.2019 - 1.10.2019 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இப்போட்டியில் நமது கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்.

6. ஆடவர் கபாடிப் போட்டி சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் அக்டோபர் 3,4,5 - 2019 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இப்போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் மூன்று சுற்றுகள் வென்று சிறப்பாக விளையாடினார்கள்.

7. ஆடவர் சதுரங்கப் போட்டி தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் 09., 10 அக்டோர் 2019 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இப்போட்டியில் நமது கல்லூரி மாணவர்கள் இரண்டு சுற்றுகள் வென்று சிறப்பாக விளையாடினார்கள்.

கல்லூரி ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் :

நமது கல்லூரியில் 52-ஆவது ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. மாணவ மாணவிகள் அணிவகுப்பு நிகழ்ச்சியில் நமது கல்லூரியில் உள்ள பதினான்கு துறை மாணவ மாணவிகளும் துறை வாரியாகக் கலந்துகொண்டு தங்கள் துறை சார்பாகக் கல்லூரி முதல்வர் முனைவர் பெ.முருகன் அவர்களுக்கு அணிவகுப்பு மரியாதை செலுத்தினார்கள். மேலும் ஆண்டு விளையாட்டுப் போட்டியில் மாணவர்களுக்குக் கிரிக்கெட், கபாடி, கோ-கோ, கூடைப்பந்து மற்றும் தடகளப் போட்டிகள் தனித்தனியாக நடைபெற்றன.

கல்லூரி ஆண்டு விளையாட்டுப் போட்டியில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்குக் குண்டு எறிதல் சிறப்புப் போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் கௌதம், தருண், அகிலன் ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களைப் பிடித்தனர்.

மினி மாரத்தான் ஓட்டம் 2021

இப்போட்டியில் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் 650பேர் கலந்து கொண்டனர். ஆண்களுக்கு 10 கி.மீ தூரமும், பெண்களுக்கு 5 கி.மீ தூரமும் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்குச் சிறப்பு விருந்தினர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.க.ஆனந்த நாராயணன் கோப்பை, பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கினார்.

இந்த மினி மாரத்தான் போட்டியில் நமது கல்லூரித் தமிழ்த்துறை மாணவர் கே.மோகன் மூன்றாம் இடம் பிடித்து நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். மாற்றுத் திறனாளிகளுக்காக நடத்தப்பட்ட மாநில பாரா ஒலிம்பிக் தடகளப் போட்டியில் நமது கல்லூரித் தமிழ்த் துறை மாணவர் பி.தருண் 100 மீட்டர் ஓட்டத்தில் மூன்றாம் இடம் வென்றார்.

## தமிழ்த் துறை

07.08.2019 அன்று இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கு வரவேற்பு விழா நடைபெற்றது. 21.02.2020 அன்று தமிழ்த்துறையில் பெற்றோர் ஆசிரியர் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது.

02.03.2020 அன்று தமிழ்த்துறை சார்பில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. வேலூர் அரசு கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர் கி.ப.கிள்ளிவளவன் ' உயர்கல்விச் சிந்தனைகள்' என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

முதுகலைத் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு UGC - NET தேர்வு அறிமுக வகுப்பு 05.03.2020 அன்று நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மு.பிரகாஷ் தேர்வு வழிமுறைகளை விளக்கிப் பேசினார்.

09.03.2020 அன்று திட்டமலை அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் இரா.சீனிவாசன் 'மரபுவழி வாசிப்பில் தனிப்பாடல்கள்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

13.03.2020 அன்று இலக்கிய ஆய்வு மேடை நிகழ்வு நடைபெற்றது. தமிழ்த்துறை மாணவர்கள் பின்வரும் தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினர்.

ச.கோவிந்தராஜ் - ரேவதியின் வெள்ளை மொழி

இர.சரவணன் - துஷ்யந்த் சரவணராஜ் கவிதையில் தொன்மம்

ச.விஜயஆனந்தன் - கீழடி ஆய்வுகள் ஒரு பார்வை

ர.தீபா - அவனும் அவளும் காப்பியத்தில் உவமைகள்

செ.மஞ்சு - தொல்காப்பியத்தில் எண்கள்

ர.ரஞ்சிதா - பாண்டியன் பரிசில் மெய்ப்பாடுகள்

டி.சுரேஷ் - தலைமலை சஞ்சீவி பெருமாள் கோயில் வரலாறு

இந்நிகழ்வை முனைவர் கா.சந்திரசேகரன் ஒருங்கிணைத்தார்.

29.07.2020 முதல் 12.08.2020 வரை தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவரும் இணையத்தின் மூலமாகப் பல தலைப்புகளில் சிறப்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக முனைவர் அ.சின்னதுரை செயல்பட்டார்.

சென்னை உ.வே.சா. நூல் நிலையத்துடன் இணைந்து 04.01.2021 முதல் 08.01.2021 வரை சுவடியியல் பதிப்பும் தொகுப்பும் எனும் தலைப்பில் இணையவழிப் பயிலரங்கம் நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் பெ.முருகன் தலைமை உரையாற்றினார்.

பயிலரங்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களாக முனைவர் மு.நடராஜன், முனைவர் பி.கந்தசாமி இருவரும் இணைந்து செயல்பட்டனர்.

கேரளப் பல்கலைக்கழகம் நடத்திய புத்தாக்கப் பயிற்சியில் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் கா.சந்திரசேகரனும் முனைவர் பி.கந்தசாமியும் கலந்து கொண்டனர். 10.02.2021 முதல் 16.02.2021 வரை பாரதிதாசன் பல்கலைக்கழகம் நடத்திய திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் முனைவர் மு.நடராஜன், முனைவர் து.இரவிக்குமார், முனைவர் க.பூபதி ஆகியோர் பயிற்சி பெற்றனர்.

பெரியார் பல்கலைக்கழக இளங்கலைத் தமிழ்ப் பாடத்திட்டக் குழுவில் முனைவர் மு.நடராஜன் முதுகலைத்தமிழ் பாடத்திட்டக் குழுவில் முனைவர் அ.சின்னதுரை செயல்படுகின்றனர்.

## <u>ஆங்கிலத் துறை</u>

முனைவர் கு.இராமச்சந்திரன் பன்னாட்டு இதழ் JOICC-இல் Idertity Crisis as a theme in mordecai Rectitrs Novel sor or a smaller Hero என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்துள்ளார். (நவம்பர் 2019 வெளியீடு)

முனைவர் கு.இராமச்சந்திரன் பன்னாட்டு இதழ் INFOKARA-இல் Idertity Crisis in mordecai Rectitrs Novel solomon Gursky என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்துள்ளார். (டிசம்பர் 2019 வெளியீடு)

முனைவர் கு.இராமச்சந்திரன் IJELLH-இல் Self exploration in Anta Nalrs Ladies cape என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்துள்ளார். (பிப்ரவரி 2019 வெளியீடு)

முனைவர் கு.இராமச்சந்திரன் UGE CARE இதழில் Renoncement of Life in Arita Nairs Fictions என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்துள்ளார். (பிப்ரவரி 2020 வெளியீடு)

கல்லூரி ஆண்டு விளையாட்டு விழா 2019-2020-இல் கபடிப் போட்டியில் ஆங்கிலத்துறை மாணவிகள் முதலிடத்தை வென்றார்கள், சதுரங்கப் போட்டியில் இரண்டாம் இடத்தை வென்றார்கள். 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தை வென்றார்கள்.

முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவி இ.கவிதா மாநில அளவில் தடகள நடுவர் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

## பொருளியல் துறை

பொருளியல் மன்றத் துவக்க விழா 12.03.2020 அன்று நடைபெற்றது. கேரள மாநிலம், பரோடா வங்கியின் முதுநிலை மேலாளர் சுதீஷ்பாபு கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

நமது கல்லூரியின் வழிபாட்டுக் கூட்டத்தின் ஒரு பகுதியாக 2020-ம் ஆண்டின் பிப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தினைப் பொருளியல் துறை நடத்தியது.

பொருளியல் துறையின் பெற்றோர்-ஆசிரியர் கூட்டம் 24.02.2020 அன்று நடைபெற்றது. பெற்றோர்கள் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர்.

04.01.2021 அன்று பொருளியல் துறையின் சார்பாக வாக்களிப்பதின் அவசியத்தை வலியுறுத்தும் பொருட்டு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. நாமக்கல் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் உதவியுடன் நாமக்கல் மாவட்டக் காவல்துறை அதிகாரிகள், துறைப் பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் திரளாகக் கலந்து கொண்டனர். வாக்களிப்பதன் அவசியம் குறித்த துண்டுப் பிரசுரங்கள் நாமக்கல் பேருந்து நிலையம், பூங்காதிடல் வணிக வளாக வீதிகளில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

பொருளியல் துறையும் கல்லூரியின் வேலைவாய்ப்பு அமைப்பும் சேர்ந்து உங்கள் நடத்தைகளை நிர்வகித்தல் ( Manage your Attitades) எனும் தலைப்பில் வலைதளக் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்தன. இக்கருத்தரங்கில் கிறிஸ்துவக் கல்லூரியின் வணிக நிர்வாகத்துறைத் தலைவர் முனைவர் ச.கருப்பசாமி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். முதல்வர் மற்றும் பொருளியல் துறைப் பேராசிரியர்கள் மாணவ, மாணவிகள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நமது கல்லூரியின் பொருளியல் துறையும் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை மகளிர் கல்லூரியின் பொருளியல் துறையும் 29.01.2021 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டனர். கல்விசார் நிகழ்வுகள், கருத்தரங்குகள், வகுப்பறைப் பாடங்கள் பகிர்வு உள்ளிட்டவைகளில் இவ்விரு துறைகளும் இணைந்து மாணவர் நலனுக்காகச் செயல்பட இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுக்கிறது.

பொருளியல் துறையின் இளங்கலை இரண்டாமாண்டு மாணவர் யுவராஜ் திருச்சி மாவட்டக் காவல்துறை ஏற்பாடு செய்த மினி மாரத்தான் போட்டியில் 14.02.2021 அன்று கலந்துகொண்டு சிறப்பித்தார்.

## வணிகவியல் துறை

10.10.2019 அன்று சங்கமம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, செஞ்சியில் நடைபெற்ற இரண்டு நாள் கருத்தரங்கில் முனைவர் தீ.க.செந்தில்குமார் மற்றும் முனைவர் ப.நாகராஜன் ஆகியோர் கருத்தாளராகக் கலந்து கொண்டு கருத்துரையாற்றினார்கள்.

புதுச்சேரி நாவல் ஆராய்ச்சி மையம் 09.11.2019 அன்று முனைவர் தீ.க.செந்தில்குமார் மற்றும் முனைவர் ப.நாகராஜன் ஆகியோருக்குச் சிறந்த ஆசிரியர் விருதினை வழங்கியது.

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் வணிகவியல் துறை மற்றும் பண்டிட் மதன்மோகன் மாளவியா தேசியக் கல்வி மையம் இணைந்து நடத்திய இரண்டு நாட்கள் (24.01.2020 மற்றும் 25.01.2020) திறன் மேம்பாட்டுப் பயிற்சி வகுப்பில் முனைவர் தீ.க.செந்தில்குமார், முனைவர் மா.மணிவண்ணன் மற்றும் முனைவர் ப. நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

28.01.2020-அன்று முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் வணிகவியல் துறை மாணவர்கள் 24 பேர் கலந்து கொண்டனர்.

முனைவர் தீ.க.செந்தில்குமார் மற்றும் முனைவர் மா.மணிவண்ணன் இணைந்து அழகப்பா பல்கலைக்கழகத் தொலைதூரக் கல்வி இயக்கப் பாடப்பிரிவிற்கு வங்கிக் கோட்பாடுகள் என்ற புத்தகத்தை பிப்ரவரி 2020-இல் எழுதியுள்ளார்கள்.

புவனேஸ்வர் கலிங்கா தொழில்நுட்பப் பயிற்சி நிகர்நிலைப் பல்கலைக் கழகம், இணைய வழி மூலமாக 22.06.2020 முதல் 28.06.2020 முடிய (7 நாட்கள்) நடத்திய திறன் மேம்பாட்டுப் பயிற்சி வகுப்பில் முனைவர் ப.நாகராஜன் பங்கு பெற்றார்.

04.11.2020 அன்று முனைவர் தீ.க.செந்தில்குமார் விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வணிகவியல் துறை மாணவிகளுக்குக் காணொலி ( Webinar) மூலம் சிறப்புரை வழங்கினார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரகக் கல்விக் குழு மற்றும் இந்திய அரசின் கல்வி அமைச்சகம் இணைந்து 12.11.2020 அன்று இணையவழி மூலமாக நடத்திய ஒருநாள் தொழில் முனைவோருக்கான பயிற்சிப் பட்டறையில் முனைவர் தீ.க.செந்தில்குமார், முனைவர் மா.மணிவண்ணன் மற்றும் முனைவர் ப.நாகராஜன் ஆகியோர் பங்குபெற்றனர்.

**<u>வணிக நிர்வாகவியல் துறை</u>**

28.01.2020 அன்று வணிக நிர்வாகத்துறையின் மாணவ மாணவிகள் ராசிபுரம், முத்தாயம்மாள் பொறியியல் கல்லூரி வணிக மேலாண்மைத் துறையில் நடத்திய TALENZ போட்டிகளில் பங்கேற்று முதல் பரிசு பெற்றனர்.

18.02.2020 அன்று நாமக்கல் செல்வம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ந.ராஜவேல் முன்னிலையில் நமது கல்லூரி வணிக நிர்வாகத்துறை அக்கல்லூரியில் உள்ள வணிக நிர்வாகத்துறை, தாவரவியல், வேதியியல், நுண்ணுயிரியல், உயிரி தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

25.02.2020 அன்று திரு.அமர்நாத் Proprietor, Bullion Fax Commodities Pvt.Lt.Salem. மாணவர்களிடையே பங்குச் சந்தை பற்றியும் அதிலுள்ள வேலைவாய்ப்பினையும் எடுத்துரைத்தார்.

துறையின் உதவிப்பேராசிரியர் முனைவர் வெ.இராஜேஸ்வரி அவர்களின் மேற்பார்வையில் மாணவி ஒருவர் முனைவர் பட்டம் பெற்றார்.

11.03.2020 அன்று காலை 11.00 மணியளவில் வணிக நிர்வாகத்துறையில் நமது கல்லூரியின் தாவரவியல் உதவிப் பேராசிரியர் முனைவர் வே.பாலகிருஷ்ணன் அவர்கள் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகளும் வழிகாட்டு முறைகளும் (Entrepreneurship for Graduates) என்ற தலைப்பில் உரையாற்றினார்.

25.03.2021 அன்று ராசிபுரம் முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரி விலங்கியல் துறைத்தலைவர் முனைவர் சுரேஷ்குமார் மாணவ மாணவிகளுக்கு ஒருநாள் பயிற்சிப் பட்டறை நடத்தினார். அதில் தேனீ வளர்ப்பு மற்றும் தொழில் சார்ந்த வாய்ப்பினை எடுத்துரைத்தார்.

## புள்ளியியல் துறை

புள்ளியியல் துறை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் 18.02.2020 அன்று ஒருநாள் கல்விச் சுற்றுலாவாக நாமக்கல், மோகனூர் சாலையில் உள்ள ஐஸ்வர்யா ஃபீட்ஸ் குழுமத்திற்கு நேரில் சென்று கோழி வளர்ப்பு, கோழித் தீவனம் தயாரிப்பு முறைகள், முட்டைகள் பராமரித்தல் மற்றும் முட்டைகள் ஏற்றுமதி குறித்த அனைத்துச் செயல்பாடுகள், இயந்திரங்களின் செயல்பாடுகள், தரக்கட்டுபாட்டு முறைகள் மற்றும் அலுவலகங்களின் செயல்பாடுகளைப் பார்வையிட்டனர்.

20.02.2020 அன்று புள்ளியியல் துறை மாணவர்களுக்கு வினாடி வினாப் போட்டி மற்றும் 'அன்றாட வாழ்வில் புள்ளியியலின் பங்கு' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியும் நடத்தப்பட்டன.

24.02.2020 அன்று புள்ளியல் துறையில் XLSTAT என்ற தலைப்பில் கருத்தரங்கம் மற்றும் பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் தலைமை தாங்கினார். ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புள்ளியியல் துறை உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர் எஸ்.மோகன் பிரபு சிறப்புரையாற்றினார்.

## தாவரவியல் துறை

இக்கல்வியாண்டில் தாவரவியல் மன்றக் கூட்டத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கடல் உயிரியல் உயராய்வு மையத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் க.சிவகுமார் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

இத்துறையின் இளநிலை இரண்டாம் ஆண்டு மாணவர்,நா.நித்திக் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் சென்னை மற்றும் செஞ்சுருள் சங்கம் , பெரியார் பல்கலைக்கழகம் நடத்திய சக பயிற்றுநர் என்ற பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றுள்ளார்.

இத்துறைப் பேராசிரியர் திரு.பி.சுப்பிரமணியம் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

இத்துறையில் முழுநேர ஆய்வில் திரு.எம்.அருள்குமார் பகுதிநேர ஆய்வில் திருமதி.ஜி.மாலதி ஆகியோர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

இத்துறையைச் சேர்ந்த முதுஅறிவியல் மாணவி வசந்தி பல்கலைக்கழகத் தரவரிசையில் ஒன்பதாமிடமும் எம்.பில் மாணவி சிவகாமி பல்கலைக்கழகத் தரவரிசையில் முதல் இடமும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இத்துறையின் பேராசிரியர்கள் மற்றும் முனைவர் பட்ட மாணவர்கள் பல்வேறு தேசியக் கருத்தரங்குகளில் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளனர்.

## வேதியியல் துறை

இத்துறையின் உதவிப்பேராசிரியர் ஆ.லோகநாதன், இந்த ஆண்டில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

2019-2020-ஆம் ஆண்டுக்கான வேதியியல் மன்ற விழாவில் 'வேதியியலும் வாழ்வியலும்' எனும் தலைப்பில் திரு.எ.வேனு கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும் சேலம் அரசு கலைக்கல்லூரி வேதியியல் உதவிப்பேராசிரியர் திரு.ம.மாதேஸ்வரன் சிறப்புரை நிகழ்த்தினார்.

கொரோனா தொற்றுக் காலகட்டத்தில் தேசிய அளவிலான இணையவழிக் கருத்தரங்கம் மூன்று முறை நடத்தப்பட்டது. பன்னாட்டு அளவிலான இணையவழிக் கருத்தரங்கம் மற்றும் பேராசிரியர்களுக்கான ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடத்தப்பட்டது.

தேசிய அளவிலான வேதியியல் மாணவர்களுக்கு வினாடி வினா நடத்தப்பட்டது. இவை அனைத்திற்கும் ஒருங்கிணைப்பாளராகத் துறைத்தலைவர் இர.வெ.சக்திவேல் செயல்பட்டார்.

2020-ஆம் கல்வியாண்டிற்கான விளையாட்டுத்துறை சார்பில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் Over all Championship -யை இத்துறை மாணவர்கள் பெற்றனர்.

2020-2021 ஆம் ஆண்டில் துறை சார்பாக முப்பெரும் விழா நடத்தப்பட்டது.

துறைப் பேராசிரியர்கள் முனைவர் பொ.மகாலிங்கம், முனைவர் பொ.சிவக்குமார், முனைவர் பொ.தமிழரசு, முனைவர் இர.வெ.சக்திவேல், திரு. ப.சங்குதேவன் ஆகியோர் பன்னாட்டு இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளனர்.

## இயற்பியல் துறை

இயற்பியல் துறையின் மன்றத் தொடக்க விழா 13.09.2019 அன்று நடைபெற்றது. இதில் பாரதியார் பல்கலைக்கழக இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் கே.சீனிவாசன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, 'படிக வளர்ச்சியின் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

பெற்றோர் ஆசிரியர் சந்திப்புக் கூட்டம் 19.12.2019 அன்று கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. இதில் இருநூறுக்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்துகொண்டு தங்களது கருத்துகளைத் தெரிவித்துள்ளனர்.

இத்துறையின் சார்பாகத் தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு 'செயற்கைக்கோள் அறிவியல்' என்ற தலைப்பில் தேசிய அளவிலான ஒருநாள் கருத்தரங்கு 21.02.2020 அன்று நடைபெற்றது. இதில் இஸ்ரோ மூத்த விஞ்ஞானி எம்.பாலசண்முகம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு செயற்கைக்கோள் தொழில்நுட்பம் பற்றிச் சிறப்புரையாற்றினார்.

இத்துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் வீ.வேலுசாமியின் மேற்பார்வையின் கீழ் முதுநிலை அறிவியல் மாணவர்கள் நான்கு பேர் TNSCST யின் ஆராய்ச்சித் திட்டத்திற்காக ரூ.7000 பெற்றனர்.

இத்துறையின் கீழ்க்கண்ட மாணவர்கள் முனைவர் பட்டம் பெற்றனர்.

கே.சாரதா, வீ.சண்முகம், டி.ரூபன்குரு, வீ.கவிதா, கே.விக்ரம் பிரசாத், எஸ்.பரணி

இத்துறையின் முன்னாள் மாணவர்கள் சந்திப்புக் கூட்டம் 22.12.2020 அன்று நடைபெற்றது. இதில் ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

பி.விஜயகுமார், ஆய்வியல் நிறைஞர் மாணவர் டிசம்பர் 2020 ஆம் ஆண்டில் UGC - NET தேர்ச்சி பெற்றுள்ளார்.

## விலங்கியல் துறை

24.07.2019 அன்று நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற மீன்வளர்ப்புப் பயிற்சியில் விலங்கியல் துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் ச.சாமிதுரை மற்றும் இளம் அறிவியல் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் கலந்து கொண்டனர்.

20.08.2019 அன்று முனைவர் மோ.இராஜசேகரபாண்டியன் நாமக்கல் இராமலிங்கம் அரசு பெண்கள் கலைக்கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு நுண்ணுயிரியலில் பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

12.02.2020 அன்று நமது கல்லூரிச் செஞ்சிலுவைச் சங்கம் சார்பாக நடைபெற்ற கோலப் போட்டியில் இளம் அறிவியல் முதலாம் ஆண்டு மாணவியர்கள் தேன்மொழி, சினேகா, ரேவதி, தவஸ்ரீ ஆகிய நான்குபேர் கலந்துகொண்டு இரண்டாம் பரிசு பெற்றனர்.

13.02.2020 அன்று விலங்கியல் துறை மன்றக் கூட்டம் நடைபெற்றது. இதில் திருவேங்கடம் விவேகானந்தா கல்லூரித் துணை முதல்வர், விலங்கியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் வீ.பார்த்தசாரதி வருகை தந்து இன்றைய சூழ்நிலையில் உயிரியல் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பும் அதன் வளர்ச்சியும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

14.02.2020 அன்று சேலம்-7 அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற வனவிலங்குப் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கில் துறைத்தலைவர் முனைவர் மோ. இராஜசேகரபாண்டியன் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார். மேலும் இளம் அறிவியல் முதலாம் ஆண்டு மாணவியர் தவஸ்ரீ மற்றும் தேன்மொழி ஆகியோர் கலந்து கொண்டனர்.

20.02.2020 அன்று குமாரபாளையம் ஜெ.கே.கே.நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி விலங்கியல் துறையில் EMERGING TRENDS IN GLOBAL TOXICOLOGY (ETGT-2020)" என்ற தலைப்பில் நடைபெற்ற ஒருநாள் கருத்தரங்கில் விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ப.சேகர் மற்றும் முது அறிவியல் மாணவர்களும் இளம் அறிவியல் மூன்றாமாண்டு மாணவர்களும் கலந்து கொண்டனர்.

22.02.2020 அன்று கரூர் கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நுண்ணுயிரியல் துறையில் "Conservation of Indigenous Knowledge in Current Medicine System" என்ற தலைப்பில் நடைபெற்ற ஒருநாள் கருத்தரங்கில் விலங்கியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் மு.பிரதாப் மற்றும் கௌரவ விரிவுரையாளர் முனைவர் க.சாமிதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெரியார் பல்கலைக்கழகத்தின் இளம் அறிவியல் விலங்கியல் பாட வல்லுனராக முனைவர் ப.சேகர் 2020- 2023-ஆம் ஆண்டு வரை நியமிக்கப்பட்டுள்ளார்.

முனைவர் மோ.இராஜசேகரபாண்டியன், முனைவர் ப.சேகர், மற்றும் முனைவர் ஆ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பல்வேறு UGC அங்கீகாரம் பெற்ற இதழ்களில் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர்.

## கணினி அறிவியல் துறை

இத்துறையின் உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர் ப. கமலக்கண்ணன் 13.02.2020 முதல் 26.02.2020 வரை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புத்தாக்கப் பயிற்சியில் கலந்து கொண்டார்.

சென்னை, தமிழ்நாடு உயர்கல்வி மன்றம் மூலம் 15.05.2020 முதல் 16.05.2020 வரை இரண்டு நாட்கள் நடைபெற்ற இணையவழிப் பயிலரங்கத்தில் கலந்து கொண்டார்.

உதவிப்பேராசிரியர் முனைவர் க.மகாமுனி பல்கலைக்கழக மானியக்குழு உதவியுடன் ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 13.12.2019 முதல் 14.12.2019 வரை நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டார். இவர் பெரியார் பல்கலைக்கழகத்தில் இந்த ஆண்டில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

சென்னை, தமிழ்நாடு உயர்கல்வி மன்றம் மூலம் 29.05.2020 முதல் 30.05.2020 வரை இரண்டு நாட்கள் நடைபெற்ற இணையவழிப் பயிலரங்கத்தில் பங்கு பெற்றுள்ளார்.

உதவிப் பேராசிரியர் முனைவர் அ.செந்தில்குமார் நிலக்கோட்டை அரசு கலைக்கல்லூரியில் 18.06.2020-இல் நடைபெற்ற இணையவழிப் பயிற்சியில் கலந்து கொண்டார். 24.07.2020-இல் நமது கல்லூரியில் நடைபெற்ற இணையவழிப் பயிற்சியில் கலந்து கொண்டார்.

உதவிப் பேராசிரியர் முனைவர் எ.து. வெங்கடேஷ் 02.07.2020-இல் கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வில் புறத்தேர்வாளராகக் கலந்து கொண்டார். மேலும் மெட்டல்லா, லயோலா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 01.07.2020 அன்று நடைபெற்ற வலைத்தளக் கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

**<u>கணிதத் துறை</u>**

உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் 04.03.2019 அன்று நாமக்கல் செல்வம் தொழில்நுட்பக் கல்லூரியில் தேசிய அளவில் நடைபெற்ற கருத்தரங்கில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்டார். சேலம் ஸ்ரீ கணேஷ் கல்லூரியில் 'கணிதத்தின் பயன்பாடுகள்' என்னும் தலைப்பில் சிறப்பு விருந்தினராகப் பங்கு பெற்றுள்ளார். இவரின் மேற்பார்வையின் கீழ் எம்.சதீஸ்குமார் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். இவர் பெரியார் பல்கலைக்கழகத்தில் முதுஅறிவியல் கணிதப் பாடத்திட்டக் குழுவில் உறுப்பினராக உள்ளார். பன்னாட்டு இதழில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளார். டெல்லி இராமானுஜம் கல்லூரியில் 2021 - ஆம் ஆண்டு ஜீலை 15 முதல் 29 வரை நடைபெற்ற இணையவழி, ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் கலந்து கொண்டார்.

இத்துறையின் உதவிப் பேராசிரியர்கள் முனைவர் பொ.சுந்தரராஜன், பன்னாட்டு ஆய்வு இதழிலில் நான்கு ஆய்வுக் கட்டுரைகளும் முனைவர் செ. ரகுபதி ஒரு கட்டுரையும் சமர்ப்பித்துள்ளனர். இருவரும் ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

இத்துறையின் உதவிப் பேராசிரியர் தி.இராஜேஷ்கண்ணன் 2020-ஆம் ஆண்டு ஜனவரியில் கோவை, கொங்கு நாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தார். மேலும் பன்னாட்டு ஆய்வு இதழில் ஒரு ஆய்வுக் கட்டுரை வெளியிட்டுள்ளார்.

உதவிப் பேராசிரியர் முனைவர் இரா.விஜயலட்சுமி 2020-ஆம் ஆண்டு ஜனவரியில், கோவை, கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் இரண்டு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். மேலும் பன்னாட்டு ஆய்வு இதழில் மூன்று ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். மேலும் இவர் மார்ச் 2021 - ஆண்டு திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு மையத்தில் நடைபெற்ற குறுகியகால வலைதளப் பயிற்சியில் கலந்துகொண்டார்.

## புவியியல் துறை

புவியியல் துறை உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் முனைவர் பெ.தங்கவேலு பெரியார் பல்கலைக் கழக இளம் அறிவியல் புவியியல் மற்றும் முதுஅறிவியல் புவியியல் பாடத்திட்டக் குழுத் தலைவராக உள்ளார். இத்துறையைச் சேர்ந்த கௌரவ விரிவுரையாளர்கள் முனைவர் கு.ருத்தரவேல் மூர்த்தி மற்றும் முனைவர் சு.செந்தில்குமார் ஆகிய இருவரும் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மேற்கொண்ட தமிழ்நாடு பாடநூல் தயாரிப்புப் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு புதிய பாடத்திட்டக் குழுவின் எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடநூலில் புவியியல் பாடத்திற்கான பணிகளை நூல் ஆசிரியர்களாக மேற்கொண்டனர்.

இத்துறை மாணவர்கள் மற்றும் வணிக நிர்வாகவியல் துறை மாணவர்களுக்கு தொழில்முனைவோர் மற்றும் அதன் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இத்துறையில் இளம் அறிவியல் இரண்டாமாண்டு பயிலும் மாணவி க.அஜந்தா மகளிர் தினத்தன்று நடைபெற்ற காப்பி பெயிண்டிங் போட்டியில் கலந்துகொண்டு இரண்டாம் பரிசு வென்றுள்ளார்.

## மாணவர்களின் படைப்புகள்

### நமது கல்லூரி

அரைநூற்றாண்டினைக் கடந்து
அண்ணாவின் பெயரினைச் சுமந்து
மாற்றங்கள் பல கலந்து
மாண்புமிக்க மாணவர்களைச் சுமந்து
குன்றாப் புகழுடன் உயர்ந்து
உயர் குன்றின் அருகில் பிறந்து நிற்கும்
நீ அழகான கல்லூரி
ஆற்றலுள்ள கல்லூரி
எமது கல்லூரி....

**க. சின்னசாமி**
முதுஅறிவியல் வேதியியல்
முதலாமாண்டு

### தெரியாது

விடியும் வரை தெரியாது
கண்டது கனவு என்று
புரியும் வரை தெரியாது
செய்தது தவறு என்று
முயற்சிக்கும் வரை தெரியாது
வெற்றியா ? தோல்வியா ? என்று
பழகும் வரை தெரியாது
நட்பு அழகானது என்று
பிரியும் வரை தெரியாது
நட்பின் ஆழம் எதுவென்று

**இர.தீபிகா**
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு.

## கல்லூரியும் என் நண்பர்களும்

கல்லூரிக் காலம்
கால் முளைத்துத் தரையிறங்கி
விண்மீன் வந்து வாழ ஏங்கும்
வசந்த காலம்...
மீண்டும் காணக் கண்கள் ஏங்கும்
இனிமைக் காலம்...
பரிவேதுமில்லா பொது ஆலயம்
கல்லூரி சொர்க்க மாளிகை...
பெரியதாய் விரிந்த நந்தவனத்தில்
புதியதாய்ப் பிறந்த பூக்களானோம்...
ஆணும் பெண்ணும் நட்பில் கரைந்து
சோகம் மறந்து சொந்தம் கொண்டாடிய
சொர்க்க மாளிகை....

கனவுகள் விரிந்ததும் அங்கேதான்...
கற்பனை மலர்ந்ததும் அங்கேதான்...
நட்பு வட்டத்தில் நம்பிக்கை உதித்து
நங்கூரம் ஆனதும் அங்கேதான்...
சின்னஞ்சிறு குறும்பில் விளைந்த
அரும்பு மகிழ்வுகள் ஏராளம்...
அன்போடு அக்கறை பொழிந்த
ஆசான்கள் அங்கே தாராளம்.
பேருந்துப் படிகளில் தொங்கி
பயந்து பயணித்த அனுபவங்கள்...
தேர்வு எழுத வரும் வரையில்
தெனாவெட்டாய்த் திரிந்த நிமிடங்கள்...

**ம.பூவரசன்**
முதுகலை ஆங்கில இலக்கியம்
முதலாமாண்டு

## விவசாயம்

கவி முகத்தை
அறிமுகம் செய்து வைத்த
என் ஆசானுக்கு..
வளையாதே நில்
விவசாயம் பார்க்க வேண்டும்...
யாருக்குத் தான் பிடிக்காது
பசியுடன் படுத்தாலும்
வியர்வையின் அழகு...
தூர்வார நீரில்லை
நனைந்தன கண்ணீரில்...
தூக்கம் தொலைந்தது
சேறில்லாத நாற்றங்காலில்
தவித்த தேரைகள்...
ஆங்கிலேயராலும்
தூக்க முடியவில்லையே ?

ஏர்க் கலப்பையை
வறுமைத் துயரம் அறியாத
குடிசையின் மூங்கிலைக்
குடையும் வண்டுகள்...
கரையான் கூட
தின்பதில்லை
காய்ந்த கதிர்களை...
களத்திற்குச் செல்லாமல்
கனவுடன் இருக்கும்
சாலிகளும் கிலங்களும்...
கண்ணேறு வாயன்
எதற்கு ?
காய்ந்த கதிர்களுக்கா...
எப்போது கண்ணீர்
விடுவாய் என
வருணனை எண்ணி...

**ஜெ.ராஜா**
முதுகலைத் தமிழ்
இரண்டாமாண்டு

## ஆசான்

இலக்கணத்திற்கே இலக்கணம் வகுக்கும் ஆசானே!
தேவலோகத்திற்குச் செல்லவிருக்கும்
பூலோகப் புதல்வனே!
புலவர்களின் நண்பனே!
அறிவின் அறிஞனே!
கல்வியின் கள்வனே!
துறையின் துறவியே!
சாத்தானும் சரணடையும் வகுப்பறையில் உமது
பண்பைப் பற்றிக் கூட அறியாத என்னை
அன்பாய் அரவணைத்தாய்
அம்மாவின் அன்பும்
அப்பாவின் குணமும்
உன்னிடத்தில் மட்டுமே கண்டேன்
அண்டத்தையே அதிரவைத்து
உணர வைக்கும் ஆசானே!
பல்லாண்டு உம் வரலாறு வாழ்க...

**வே.தினேஷ்குமார்**
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## தவிப்பு

மலரே !
உன்னைக் கண்டநொடி முதல்
என் விழிகள் உறங்க மறுக்கின்றன
உன் கண்களை என் மனதில்
அம்புகளாய் ஏத்தி விட்டுப்
பிடுங்க மறுக்கிறாய்
காயத்தோடு தவிக்கிறேன்
மருந்திடுவாயா ?...

**த.சுபிக்ஷா**
இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு

## கவிதை

காதலின் சின்னம்
கண்ணில் மலர்ந்து கனலாய் எழுந்து
காலம் முழுக்கக் கைகள் பிடித்து
கதைகள் பேசிக் கனவுகள் செதுக்கி
காடு வரைக்கும் கூட வந்திடும்.
நினைவுகள் மட்டுமே காதலின் சின்னங்கள்
காதலன் ஞாபகச் சின்னங்கள்

**வி.கௌதம்**
இளங்கலை விலங்கியல்
இரண்டாமாண்டு

## தமிழ்

தமிழே உனை சுவைக்க இப்பிறவி எனக்குப்
போதாது இப்பூவுலகம் வாழும் வரை
எப்பிறவி எடுப்பினும் அப்பிறவியும் உனை
அடையவேண்டும் என உம்மிடம்
வேண்டுகிறேன்

முத்துமுத்தாய் எழுததெரியாது ஆனால்
கொத்துக் கொத்தாய் வாசிக்கத் தெரியும்

**வே.தினேஷ்குமார்**
இளங்கலைத்தமிழ் இரண்டாமாண்டு

## அம்மா

நான் எழுமுன் நீ எழுந்து
என் தேவைகளை நீ அறிந்து
பேச்சினில் அன்பை விதைத்து
தினமும் அறுசுவை உணவைப் பரிசளித்து
நான் படிக்க நீ உழைத்து
உன் வாழ்வை எனக்கு அர்ப்பணித்து
பணத்தால் வரும் உறவு பொய்யானது
பாசத்தால் வரும் உறவு மெய்யானது
என்பதற்குச் சான்றானது
உன் உறவே - அம்மா

**பெ.சுதா**
முதுகலை ஆங்கிலம் இலக்கியம்
இரண்டாமாண்டு

## நட்பு

ஒன்றாகப் பிறக்கவில்லை
ஒருபோதும் பிரிவதில்லை
பிரிவிலும் சேர்ந்திருப்போம்
ஓராயிரம் சண்டை போட்டிருப்போம்
மறுநொடியே பேசிடுவோம்
ஒன்றி நாம் இருக்கையிலே
வீட்டை மறந்திடுவோம்
இனி எப்போது எப்போது
நமது சந்திப்பு காலம் தான்
பதில் செல்லும்

**ஜெ.பூவிழி**
இளங்கலைத்தமிழ் மூன்றாம் ஆண்டு

## தமிழின் பெருமை

பொழியும் விழியும் ஒன்றெனக் கொண்டோம்
சுவை பிழியும் கனிரசச் சாறெனக் கண்டோம்
கிளியும் தமிழைப் பேசிப் பழகிட வென்றோம்
இது அழியாதென்பதை ஆணையிட்டுச் சொல்வோம்
ஆதிமொழி நீதிமொழி அனைத்து மொழிகளுக்கும்
முன்னே திகழும்மொழி செம்மொழி என் தமிழ்மொழி
தோற்றத்தில் தொன்மையான மொழி அன்புக்கு மென்மையான மொழி
நட்புக்கு நன்மையான மொழி, அதிகாரத்துக்கு வன்மையான மொழி
உயிர்களுக்கு உண்மையான மொழி ஆன எம்மொழியையே
ஆடும், மாடும் அசை போடுகிறது, குயிலும், குருவியும் இசைபாடுகிறது
தமிழ்மொழியைப் பேசப்பேசத் தேன்மழை பொழியும்...
வாழ்த்துச் சொல்லச் சொல்ல வான்மழையும் பொழியும்
எத்திசையிலும் ஒலிக்கும் தித்திக்கும் சுவைகொண்ட
செம்மொழியே எம் தாய்த் தமிழ்மொழி...

**பூ.திவ்யா**
இயற்பியல் ஆய்வியல் நிறைஞர்

## பெண்ணில் பெருமை

சக்தியின் பிறப்பிடம் நீ
சாதனையின் சிறப்பிடம் நீ
மனவலிமை கொண்டவள் நீ
உயிரை வலியோடு பெற்றவள் நீ
சிகரத்தின் பிறப்பிடம் நீ
அடுப்பறையின் இருப்பிடம் நீ
சாதனைகளைச் சிந்தித்தவள் நீ
வேதனைகளைப் பெற்றவள் நீ
அலங்கரித்தவன் ஏற்றி விட்டான்
அடுப்பங்கரையில் சூடு காய
பிள்ளைகள் பேரு வாங்க...

பெட்டகமும் காலி, பெற்றெடுத்த வயிறும் காலி
குழந்தை பெயரே என் மூச்சோ!
பாசக்கயிறு என் பேச்சோ!
தாலாட்டுவது நீயே!
தொட்டிலில் காலாட்டுவது நானோ!
ஒரு பருக்கை உணவு
நான் உண்ண நிலவு
நீ இருப்பாய்ப் பசியாய்
சமூகத்தின் சீற்றலோ
உன்னுள் எழுட்டும் ஆற்றலோ...


**மா.சிவக்குமார்**
**இயற்பியல் ஆய்வியல் நிறைஞர்**



**ச.கீர்த்தனா**
**முதுகலைத் தமிழ்**
**இரண்டாமாண்டு**



**பெ.கோபாலகிருஷ்ணன்**
**இளம் அறிவியல் கணிதத்துறை**
**முதலாமாண்டு**




**து.பசுபதி**
முதுஅறிவியல் வேதியியல்
முதலாமாண்டு



**அ.விக்னேஷ்**
இளம் அறிவியல் இயற்பியல்
முதலாமாண்டு





**கே.எஸ்.கார்த்திக்**
இளம் அறிவியல் இயற்பியல்
முதலாமாண்டு



**பி.கோபாலகிருஷ்ணன்**
இளம் அறிவியல் கணிதம்
முதலாமாண்டு




**த.இளவரசி**
**இளங்கலைத் தமிழ்**
**முதலாமாண்டு**



**பி.கோபாலகிருஷ்ணன்**
**இளம் அறிவியல் கணிதம்**
**முதலாமாண்டு**



**எம்.ஜோதிவேல்**
**இளங்கலை வணிகவியல்**
**முதலாமாண்டு**



**வி.விமல்குமார்**
**இளங்கலை வணிகவியல்**
**முதலாமாண்டு**




இளைஞர் செஞ்சிலுவைச் சங்க ஆண்டுவிழாவில்
கல்லூரி முதல்வர் உரையாற்றினார்.



மினி மாரத்தான் போட்டியை
நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு.கா.மெகராஜ் அவர்கள்
தொடங்கி வைத்தார்.



நுண்கலை மன்றம் நடத்திய பயிலரங்கில் முதுகலைத் தமிழ் மாணவர் ஜெயக்குமார் சிறப்பு விருந்தினரிடம் பரிசு பெற்றார்.




செஞ்சிலுவைச் சங்கம் நூற்றாண்டு விழா வாகனம் நிகழ்வில் கல்லூரி முதல்வர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் கலந்து கொண்டனர்.




ஆண்டு விளையாட்டுப் போட்டியில் தலைமை
மற்றும் சிறப்புரையைக் கல்லூரி முதல்வர்
முனைவர் பெ.முருகன் அவர்கள் ஆற்றினார்.





800 மீ ஓட்டத்தில் முதல் மூன்று
இடங்களைப் பிடித்தவர்களுக்குக்
கல்லூரி முதல்வர் முனைவர் பெ.முருகன், மூத்த
பேராசிரியர்கள் முனைவர் சு.பங்காரு, திருமதி
க.வசந்தாமணி ஆகியோர் பதக்கம் வழங்கினார்கள்.




மாணவ, மாணவிகள் மினி
மாரத்தான் போட்டியில் கலந்து
கொண்டனர்.




22.12.2020 அன்று இயற்பியல்
துறையின் முன்னாள் மாணவர்கள்
சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது.




நாமக்கல் மாவட்ட ஆட்சியர்
திரு.கா.மெகராஜ் மினி மாரத்தான்
போட்டியைத் தொடங்கி வைத்தார்.



கல்லூரி முதல்வர் சுதந்திரத்
தினத்தன்று கொடியேற்றிச்
சிறப்புரை ஆற்றுதல்.

# பணி நிறைவு பெற்றவர்



திரு. **பெ.சுந்தரசோழன்,** எம்.எஸ்ஸி, எம்.பில்.,

புவியியல் இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்

பணியில் சேர்ந்த நாள் : 27.02.1987

பணி நிறைவு பெற்ற நாள் : 31.05.2020

# அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி

நாமக்கல் - 637 002.